BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# கானகன் நாவலில் பளியர்களின் வாழ்வியல்

**முனைவர் இரா.நி. ஸ்ரீகலா**
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், தமிழ்க்கலை ஆய்வகம், தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில். மின்னஞ்சல்: Sreeshakthi.1974@gmail.com ORC ID-https://orcid.org/0000-0002-1286-571X

**ஆய்வுச் சுருக்கம்**

பழங்குடி மக்களின் வாழ்வியல் குறித்த பதிவுகள் தமிழ் இலக்கியங்களில் பிரிக்க முடியாத பகுதியாக மாறிவிட்டன. கானகன் நாவல் பளியர்களின் வாழ்வியல் போராட்டங்களைப் பேசுகிறது. காட்டினை காப்பதற்கென்று பளிச்சியம்மனால் படைக்கப்பட்டவர்கள் பளியர்கள். காட்டில் மரங்கள் ஒவ்வொன்றோடும் எத்தனையோ பளியர்களின் ஆன்மாவும் சேர்ந்தே இருக்கின்றது. காட்டில் தேவையின்றி எதையும் வேட்டையாட மாட்டார்கள் பளியர்கள். பளிச்சிக்கு பயம் என்பதே கிடையாது. தன் குழந்தை பேறை தானே பார்த்துக் கொள்ளும் மன வலிமை பளிச்சிப்பெண்களுக்கு உண்டு. அந்நியர்களின் ஆதிக்கத்தினால் என்ன நடந்தாலும் எதிர்வரும் பிரச்சனைகளைப் பளிச்சிபார்த்துக் கொள்வாள் என்ற நம்பிக்கையோடு வாழ்பவர்கள் பளியர்கள் அதனை கானகன் நாவல் வழியாக எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:**

பளியன், பண்பாடு, கருமாண்டி, வேட்டையாடல், மலைகிராமம், வாழ்வியல் மாற்றங்கள்.

## முன்னுரை

பழங்குடி மக்களின் வாழ்வியல் குறித்த பதிவுகள் தமிழ் இலக்கியங்களில் பிரிக்க முடியாத ஒரு அங்கமாக மாறிவிட்டன. தனித்துவமான பண்பாட்டு மரபினைக் கொண்டவர்கள் பழங்குடி மக்கள். 2014ல் லட்சுமி சரவணகுமார் எழுதிய கானகன் நாவல் பளியர் இன மக்களின் வாழ்வியலைப்பேசுகிறது. காட்டையே நம்பி வாழ்கின்ற மக்களின் வாழ்வியல் செய்திகளையும் வாழ்க்கை போராட்டங்களையும் இந்நாவல் வெளிப்படுத்துகிறது. காட்டுக்குள் வாழ்கின்றவர்கள் எப்போதும் சவாலான வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டவர்கள் .

## பளியர்களுக்கும் காட்டிற்குமான உறவு

காட்டினை வெறும் மரங்களும் விலங்குகளும் செறிந்த பகுதியாக மட்டும் பார்க்கவில்லை. காடு அவர்களுக்கு தெய்வம். அவர்கள் வணங்கும் தெய்வமான பளிச்சியம்மன். பளிச்சியம்மனே பளியர்களை பாதுகாக்கிறாள் என்று நம்பிக்கையோடு வாழ்கின்றனர். காடு அவர்களுக்கு உரிமையானது. *“எல்லா காட்டுக்கும் ஒரு ஒடம்பு இருக்கு. மனுஷ உடம்புக்கு இருக்கிற எல்லா உறுப்பையும் மாதிரி அதுக்கும் உடலுறுப்பு இருக்கு. மனுஷனுக்கு னு ஆதாரமா ஒரு உசுரு இருக்கிற மாதிரி அதுக்கும் ஒரு உசுரு இருக்கு … காட்டுக்குள்ள காலு வெச்சு நடக்கிறப்போ எல்லாம் யாரோ ஒருத்தரோட உடம்புல கால வச்சு நடக்குறோங்குற கவனத்தோட நட …காடு செல சமயம் தேவத … செல சமயம் மோகினி செல சமயம் பிசாசு …எப்ப என்னவா இருக்கும்னு தெரியாது”.(கானகன், ப.15)* என்பதிலிருந்தே காட்டைப் பற்றிய புரிதலை அறிந்து கொள்ள முடிகிறது.

காட்டினை நன்கு அறிந்து வைத்திருப்பவர்களை கருமாண்டி என்பார்கள். தங்கப்பன் பூசணி சடையன் வாசி போன்றோர் காட்டினைப் பற்றிய முழுமையான அறிவு உடையவர்கள் வனத்தைக்காக்கும் விலங்குகளை தேவை ஏற்பட்டாலன்றி வேட்டையாடுவதில்லை பளியர்கள். அவ்வாறு செய்தால் பளிச்சியின் கோபத்திற்கு ஆளாகி விடுவோம் என்று நம்பினர். உணவுக்காக அன்றி எதற்காகவும் வேட்டையாடக்கூடாது என்பது பளியரின் மரபாக இருந்தது. பளிச்சியம்மன் தன் பிள்ளைகளை ஒருபோதும் தனித்துப் போக விடுவதில்லை அப்படி போகும் பிள்ளைகள் பளிச்சி அம்மனை இழிவு செய்து விட்டவர்களாகவே பார்க்கப்பட்டவர்கள்.




பளிச்சியம்மனுக்கு பட்டாம்பூச்சி பிடிக்காது துர் சகுனத்தின் குறியீடாக கருதினர் . புலியை ப்பாட்டா என்று சொல்லி பளியர்கள் வணங்கினர். காடு பழங்குடி மக்களுக்கு மிகவும் பரிச்சயமானது தான் என்றாலும் காட்டுக்குள் போகும்போது பாதை மாறி விடக்கூடாது என்பதற்காக போகும்போது கிளையை ஒடித்து அடையாளம் வைத்து செல்வார்கள். அப்போதுதான் திரும்பி வரும்போது எளிதில் வர முடியும். காட்டில் யார் யாரோ வந்து மரங்களை வெட்டி செல்வதை பளியர்கள் விரும்பவில்லை. இந்த க்காட்டில் மரம் ஒவ்வொன்றுக்கும் தாய் நிலாவில் இருக்கிறாள் இந்த மரங்கள் அவளின் பிள்ளை இதை கொல்கிறவர்களையெல்லாம் அமாவாசை நாளில் நிலாவில் இருக்கும் பாம்பு வெறிகொண்டு விழுங்கி விடுமென பாட்டா சொல்லி இருக்கிறார். காட்டின் மரங்கள் ஒவ்வொன்றோடும் எத்தனையோ பளியன்களின் ஆன்மாவும் சேர்ந்தே தான் இருக்கிறது. "பளியன்களின் ஆன்மா மட்டுமல்ல அந்த காட்டில் இருக்கும் அத்தனை உயிர்களின் ஆன்மாக்களும் மரங்களில் தான் காலாகாலத்திற்கும் சேமிக்கப்படுகின்றன. ஆத்மாக்களுக்கு அழிவில்லை என்கிறபோது இந்த மரத்தை எப்படி அழித்துவிட முடியும்" என்பன போன்ற நம்பிக்கைகளை உடையவர்களாக பளியர்கள் இருந்தனர். வேறு ஊர்களில் இருந்து வந்த முதலாளிகள் காட்டினுள் மரங்களை அழித்து கஞ்சா செடிகளை விதைத்து கஞ்சா தோட்டங்கள் ஆக்கியதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

வன அதிகாரிகளின் அடக்கு முறைக்கும் அதிகாரத்திற்கும் கட்டுப்பட்டவர்களாக எதையும் எதிர்த்து நிற்க தைரியம் இல்லாதவர்களாக காடு கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருவதை கண்டு கலங்கிய படி நிற்கத்தான் அவர்களால் முடிந்தது *"எவன் கையில் அதிகாரம் இருக்கோ அவன் சொல்றதுதான் சட்டம்" (கானகன், ப.82 )*என்று அடங்கியும் அமைதியாக வாழ்ந்தாலும் என்ன பிரச்சனை வந்தாலும் பளிச்சியம்மன் பார்த்துக் கொள்வாள் என்ற நம்பிக்கையோடு இருந்தனர்.

**பளியர் குலப்பெண்கள்**

பளியர் குலப்பெண்கள் மிகவும் வீரம் பொருந்தியவர்களாக இருந்ததை கானகன் நாவல் செல்லாயி கதைப்பாத்திரம் உணர்த்துகிறது. உணவுத் தேவை தவிர வேறு எதற்காகவும் வேட்டையாடுவதை விரும்ப மாட்டார்கள் பளியர்கள். ஆனால் செல்லாயிக்கு வேட்டையாடுவதில் அவ்வளவு விருப்பம் கணவனோடு சேர்ந்த வேட்டைக்குச் செல்வாள். பளிச்சி தன் குழந்தைப்பேறை அவளாகவே தான் பார்த்துக் கொள்ள வேண்டும் பிரசவத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னும் மூன்று நாட்களுக்குப் பின்னும் தாயையும் குழந்தையையும் யாரும் தொட மாட்டார்கள். தாயின் தொப்புள் கொடியை அறுக்கின்றவர் குழந்தையை முதலில் காட்டுவது காட்டிடம் தான். காட்டிற்கும் பளியர்களுக்குமான நெருக்கம் அவ்வளவு உயிரோட்டமானதாக இருந்தது. பளிச்சிக்கு தன் பிள்ளை வெளியேறும் நேரம் காலம் எல்லாம் தெரியும். அவள் உடல் வனத்தோடும் வானத்தோடும் நட்சத்திரங்களோடும் நெருங்கிய தொடர்பு கொண்டது. நட்சத்திரங்கள் தான் பிள்ளைகளாக பிறக்கின்றார்கள் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர். அதிகாலையில் குழந்தையைப் பெறவே ஒவ்வொரு பளிச்சியும் விரும்புவாள் .

தன் பிரசவத்தை தானே பார்த்துக் கொள்ளும் தைரியம் ஒரு பெண்ணுக்கு இருக்கிறது என்றால் பளியர் இனப்பெண்கள் எவ்வளவு மனவலிமை உடையவர்கள் என்பதை இதிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது .

**வேட்டையாடல்**

பளியர்கள் வேட்டையை வீரத்தின் அடையாளமாக கருதினர். வேட்டையாடும் முறையை அறிந்திருந்தாலும் தேவையில்லாமல் வேட்டையாடுவதில்லை. வேட்டையாடுவதிலும் சில வரைமுறைகளை வைத்திருந்தனர். உணவுக்காக சிறிய விலங்குகளையே வேட்டையாடுவர். பெண் விலங்குகளையும் கருவுற்றிருக்கும் விலங்குகளையும் வேட்டையாடுவதில்லை. யானையை சத்தியவாக்கு என்று கருதினர். பளிச்சியின் வாக்குக்கு கட்டுப்பட்டவைகள் என்பதால் யானையை வேட்டையாடுவதில்லை. *"தவளை*

*நாடு முழுக்க மிருகங்கள் பளிச்சியின் வாக்குக்குக் கட்டுப்பட்டவை பளியன்களின் வயல்களுக்குள்ளோ அவர்களின் குடிசைகளுக்குள்ளோ ஒருநாளும் அவை அத்துமீறுவதில்லை. அதையும் மீறி அட்டகாசம் செய்யும் மிருகங்களைப் பளியன் தொந்தரவு செய்வதில்லை ஒன்று அம்மிருகம் பெரும் பசியில் இருக்க வேண்டும் அல்லது கிறுக்கு பிடித்து போனதாய் இருக்க வேண்டும் என்று மன்னித்து விடுவான்".(கானகன், ப.151).*

வேட்டையாட நேரம் காலம் பார்த்தே சென்றனர். *"இது வேட்டைக்குப் போற கிழமை இல்லை அதும் இல்லாம எல்லா மிருகத்துக்கும் இனவிருத்தி ஆகுற நேரம் இப்ப வேட்டைக்கு போறது சுத்தமா நல்லமா இல்ல". (கானகன், ப.106)* என்பதிலிருந்து வேட்டையில் வரைமுறை வைத்திருந்ததையும் அதை மீறினால் தெய்வக்குற்றம் ஆகிவிடும் என்றும் கருதினர்.

அபூர்வமாக நடக்கும் வேட்டையை பக்கத்தில் இருக்கும் மலை கிராமங்கள் பின் நேரமாக இருந்தாலும் பெருமையோடு சொல்வதற்காக தாரை தப்பட்டை தீப்பந்த வெளிச்சங்களோடு வருவார்கள். இதனை ஒரு சடங்கு சம்பிரதாயமாக பின்பற்றும் வழக்கம் காணப்பட்டது.

**வழிபாடுகள்**

சித்திரை மாதம் பௌர்ணமி அன்று பளிச்சியம்மனுக்கு பூஜை செய்வர். வேட்டைக்குச் செல்வதற்கு முன் பளிச்சியம்மனுக்கு பூஜையிட்டு செல்வர். வேட்டையாடிய மிருகங்களை பளிச்சியம்மனுக்கும் வன தேவதைக்கும் படையலிட்டு பூஜை செய்து வணங்கும் வழக்கம் காணப்பட்டது. காட்டிற்கு வெளியே உள்ளவர்கள் வந்து வேட்டையாடினாலும் பளிச்சிக்கு படையல் கொடுப்பர். பூசைகளை பளியர்களே செய்தனர். வேட்டையாடிய மிருகங்களை வடக்கு தெற்காக வைப்பர். பனைஓலைகளைப் பரப்பி மரக்கட்டைகளை வைப்பர். பூசாரி வன தேவதைக்கும் பளிச்சியம்மனுக்கும் பூஜை செய்வார். வேட்டையாடிய பன்றியை அதன் கழுத்தில் கத்தியை வைத்து அறுத்துவிட்டு விருந்து துவங்கட்டும் என்பர் பன்றியின் எலும்புகளை தொடாமல் கரையை மட்டும் துண்டு துண்டாக வெட்டி எடுப்பர். இறுதியில் எல்லோரும் கோஷமிட பன்றியின் தலையை உடலில் இருந்து வெட்டி எடுப்பர். வன தேவதைக்கு உணவை சமைத்து படையெடும் முன் சமைக்கப்பட்ட இறைச்சியை ஒரு நீண்ட வாழை இலையில் வைத்து அதன் மீது காட்டுப் பூக்களை தூவுவார்கள். *"கொல்லப்பட்ட பன்றி முன்னரே அடிபட்டு காயமுற்று இருக்கலாம் படைக்கப்பட்டு இருக்கும் இறைச்சி அசுத்தமானதாக இருக்கலாம் எதுவாயினும் எதிர்வரும் காலத்தில் காட்டினால் எதிர்கொள்ள நேரம் துன்பங்களிலிருந்து எங்களை காத்தருள்வாய் பளிச்சி" (கானகன், ப.101)* என்பதே அவர்களின் பிரார்த்தனையாக இருக்கும். வனத்தில் நிகழும் ஒவ்வொரு அசைவும் அவர்களுக்கு எதிர்வரும் ஏதோ ஒன்றை உணர்த்திக் கொண்டே இருக்கும். அந்த அச்சத்துடனே வாழ்க்கையை கடந்து வருவர். மனதில் ஏதேனும் குழப்பங்கள் இருந்தால் பூசாரியிடம் குறி கேட்கும் வழக்கமும் மக்களிடம் காணப்படுகிறது. மேலும் பளிச்சியம்மன் பளிச்சியின் உடலில் இறங்கி ஆக்ரோசமாய் வாக்கு சொல்வதும் உண்டு.

**வாழ்வியல் மாற்றங்கள்**

*"விலங்குகள் தாவரங்கள் போன்று மனித குலம் உயிரியல் கோட்பாட்டால் மாறுபாடு அடைந்து கொண்டு வருகின்றது இது உயிரியல் விதிகளுக்கு மட்டுமே அன்றி சமூக அமைப்பு பண்பாடு இவைகளுக்கும் பொருந்தும்" (தமிழக பழங்குடி மக்கள், ப.51). "தேனையும் தினையையும் உண்டு வாழ்ந்த பழங்குடி பளியர்கள் காட்டுக்குள் எல்லாவிதமான காய்கறிகளும் வந்ததில் மகிழ்ச்சி அடைந்தனர். அன்றாட வாழ்க்கை தேவைக்காக கஞ்சா தோட்டத்திற்கு வேலைக்கு போவதை யாரும் இப்போது குற்ற உணர்ச்சியோடு பார்ப்பதில்லை. மிக எளிய தேவைகளுக்காக தங்களின் பூர்வீகத்தை மறக்க அவர்கள் தயாராக இருந்தார்கள்"(கானகன், ப.127 ).* பளியன் யாருக்கும் அடிமை இல்லை. ஆனால் இப்போது எல்லோருக்கும் அடிமை. வெள்ளை வேஷ்டி உடுத்திய எல்லோரையும் முதலாளி என அழைத்து பழகிப் போனான்.

**முடிவுரை**

தவறு செய்தால் அதற்கான தண்டனையைப் பளிச்சியம்மன் தந்தே தீருவார் என்பதை தங்கப்பனின் மரணம் வழியாக நாவல் உணர்த்துகிறது. மூர்க்கத்தனமும் வெறித்தனமும் கொண்டு யானையை வேட்டையாடுகிறான் பெண் புலியைக் கொன்ற அவனின் செயலால் பளியர்கள் என்ன தீங்கு நேரமோ என்று அச்சம் கொள்கின்றனர். ஏனெனில் புலியை அவர்கள் மூதாதையர் (பாட்டா) என அழைத்தனர். உடல்

பலம் குன்றி தன் தவறுகளை உணர்ந்து வாழ தொடங்கியபோது அவன் செய்த குற்றத்திற்கான தண்டனையை புலியே வழங்கியது என நாவலை முடித்து இருப்பார் ஆசிரியர். காட்டில் என்ன கேடுகள் நடந்தாலும் வனம் எந்த சலனமும் இல்லாமல் இருக்கும். ஆனால் அதற்கான பதிலை கொடுக்கும் என்பதை பளியன் நன்கு அறிவான். அவன் காட்டையும் காட்டில் உள்ள ஒவ்வொரு உயிரினங்களையும் நேசிப்பவன் அத்தகைய பளியனாக வாசி காணப்படுகிறான். ஒவ்வொரு பளியனுக்கும் இந்த உணர்வு கட்டாயமாக இருக்கும் என்பதை நாவல் காட்டுகிறது.

**துணைநூற்பட்டியல்**


1. அகத்தியலிங்கம், டாக்டர் ச., தமிழக பழங்குடி மக்கள், மொழியியல் துறை ஆராய்ச்சி மாணவர் வெளியீடு 1, சிதம்பரம், 1972
2. பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், அடையாளம் , திருச்சி, 2019.
3. லெஷ்மி சரவணகுமார், கானகன், எழுத்து பிரசுரம் / சீரோ டிகிரி பப்ளிகேஷன்,சென்னை, 2019.


*****